



# அகர முதல

மின்னிதழ்

Aagaramuthalaa | www.Aagaramuthalaa.com



விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969

புதன், டிசம்பர் 01.2021 | மலர்:12 இதழ்:19

# தமிழகத்தில் ஒமிக்ரான் வைரஸ் பரவாமல் தடுக்க கண்காணிப்பு தீவிரம்

## வெளிநாட்டு பயணிகளுக்கு ஆர்டிபிசிஆர் பரிசோதனை-அமைச்சர் மா.சுப்ரமணியன்

## கனமழையால் பாதிக்கப்பட்ட:காஞ்சீபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களில் மு.க.ஸ்டாலின் ஆய்வு




உருமாறிய புதிய கொரோனா வைரசான ஒமிக்ரான், கடந்த ஒரு வார காலத்திற்குள் 14 நாடுகளில் கால் தடம் பதித்து, உலகை அச்சுறுத்தி வருகிறது. இதனைத்தொடர்ந்து மத்திய சுகாதாரத் துறை, விமான நிலையங்களுக்கு சுற்றறிக்கை அனுப்பியது. அதில் 12 நாடுகளிலிருந்து வரும் பயணிகளை 14 நாட்கள் கண்காணிப்பில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. 12 நாடுகள் பட்டியலில் தென்கிழக்கு ஆசிய நாடுகளான தென்னாப்பிரிக்கா, பிரேசில், இங்கிலாந்து, வங்கதேசம் மொரீஷியஸ், போட்ஸ்வானா , நியூசிலாந்து, ஜிம்பாப்வே, சிங்கப்பூர், ஹாங்காங், சீனா, இஸ்ரேல் ஆகியவை உள்ளன. இந்த 12 நாடுகளில் இருந்து இந்தியா வரக்கூடிய சர்வதேச விமான பயணிகளுக்கு விமான நிலைய வளாகத்திலேயே ஆர். டி. —பி . சி. ஆர் பரிசோதனை கட்டாயம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பரிசோதனை முடிவுகள் கிடைக்கும் வரை விமான நிலைய வளாகத்திலேயே அவர்களை தனிமைப்படுத்த வேண்டும் என்றும், நெகட்டிவ் முடிவு வந்தாலும் கூட அதன்பின் அவர்கள் தங்களை அடுத்த 7 நாட்கள் வீட்டில் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து 7 வது நாளில் மீண்டும் பரிசோதனை செய்து , மேலும் 7 நாட்கள் தனிமைப்படுத்தலை நீட்டிக்க வேண்டும் என சுகாதாரத் துறை சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த புதிய கட்டுப்பாடு வழிகாட்டு நெறிமுறைகள் நள்ளிரவு முதல் அமலுக்கு வந்துள்ளன. தமிழகத்தில் சென்னை, கோவை, திருச்சி, விமான நிலையங்களில் கண்காணிப்பு மற்றும் சோதனை தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இந்நிலையில் தமிழகத்தில் ஒமிக்ரான் வைரஸ் பரவாமல் தடுக்க கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் மா. சுப்ரமணியன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய அவர், தமிழகத்தில் உள்ள அனைத்து விமானநிலையங்களிலும் நாளை ஆய்வு செய்ய உள்ளோம். தமிழகம் வரும் வெளிநாட்டு பயணிகளுக்கு ஆர்டிபிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படுகிறது. வெளிநாட்டில் இருந்து தமிழகம் வருபவர்கள் அனைவரும் 7 நாள் கண்காணிக்கப்படுகிறார்கள். கண்காணிப்பின்றி விமான பயணிகள் யாரும் வெளியே வர முடியாது. என்று அமைச்சர் மா . சுப்ரமணியன் தெரிவித்தார்.



தமிழ்நாடு முழுவதும் கனமழையால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளை முதல்—அமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த 7ந் தேதி தொடங்கி இரவு, பகல் பாராமல் பல்வேறு மாவட்டங்களுக்கு நேரில் சென்று சீரமைப்பு பணிகளைப் பார்வையிட்டு, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி வருகிறார். அதன் தொடர்ச்சியாக, முதல்—அமைச்சர் மு . க. ஸ்டாலின் நேற்று காஞ்சீபுரம் மாவட்டம், வரதராஜபுரம் ஊராட்சிக்குட்பட்ட பி. டி. சி. குடியிருப்பு பகுதிகளில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டு, ஆய்வு செய்து, சீரமைப்பு பணிகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும், அப்பகுதி மக்களிடம் பாதிப்புகளின் விவரங்களை கேட்டறிந்து அவற்றை சரிசெய்திட விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று உறுதி அளித்தார். பின்னர், கனமழையால் பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பாக தங்குவதற்காக வரதராஜபுரம் ஊராட்சி , வேல்ஸ் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள முகாமிற்கு முதல் —அமைச்சர் மு. க. ஸ்டாலின் நேரில் சென்று, அங்கு தங்கியுள்ள மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார். பரத்வாஜ் நகர், பி. டி. சி. குடியிருப்பு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் மிக அதீத கனமழையின் காரணமாக குடியிருப்பு பகுதிகளில் சுமார் 4 அடி உயரத்திற்கு தேங்கியிருந்த மழைநீரை மோட்டார் பம்புகள் மூலம் அகற்றும் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு , தற்போது மழைநீர் வடிந்து வருகிறது . பாதிக்கப்பட்ட மக்கள் பைபர் படகுகளில் பாதுகாப்பாக மீட்கப்பட்டு , அருகில் உள்ள நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு 3 வேளை உணவும், தேவையான அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டு உள்ளது. காஞ்சீபுரம் மாவட்டத்தில் தற்போதுள்ள 25 முகாம்களில் சுமார் 930 நபர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர் . பின்னர் செங்கல்பட்டு மாவட்டம், முடிச்சூர் ஊராட்சிக்குட்பட்ட அமுதம் நகர் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டு, ஆய்வு செய்து, சீரமைப்பு பணிகளை துரிதமாக மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். மேலும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளையும் வழங்கினார். பின்னர் , தாம்பரம் மாநகராட்சி, வானியன்குளம், இரும்புலியூர் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வெள்ளத்தடுப்பு பணிகள் குறித்த விவரங்களை முதல்—அமைச்சர் மு. க . ஸ்டாலின் கேட்டறிந்தார். செங்கல்பட்டு மாவட்டத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதல்—அமைச்சர் மு. க. ஸ்டாலின் பார்வையிட வருவதை அறிந்த முடிச்சூர், ஜோதி நகர் பகுதியைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்ட தங்கள் பகுதியையும் பார்வையிட வேண்டும் என்று வைத்த கோரிக்கையின் அடிப்படையில், முதல் —அமைச்சர் மு. க. ஸ்டாலின் பாதிக்கப்பட்ட ஜோதி நகரையும் பார்வையிட்டு, அங்கு தேங்கியுள்ள மழைநீரை துரிதமாக அகற்றிட மாவட்ட நிர்வாகத்திற்கு உத்தரவிட்டு , பொதுமக்களிடம் தேவைப்படும் நிவாரண உதவிகள் குறித்து கேட்டறிந்தார். செங்கல்பட்டு மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையையொட்டி மிகவும் அதிகம் பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளை கண்டறிந்து 11 துறைகளைச் சார்ந்த அலுவலர்களை உள்ளடக்கிய 33 குழுக்களும், துணை கலெக்டர், வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் நகராட்சி ஆணையர்கள் நிலையில் 8 வட்டங்களுக்கும் வட்ட அளவிலான கண்காணிப்பு குழுவும் அமைக்கப்பட்டு, சீரமைப்பு மற்றும் நிவாரண பணிகள் போர்க்கால அடிப்படையில் நடைபெற்று வருகிறது . மேலும், கனமழையால் அதிகமாக பாதிக்கக்கூடிய பகுதிகளான முடிச்சூர் , தாம்பரம், இரும்புலியூர், கூடுவாஞ்சேரி, தாழம்பூர், பெரும்பாக்கம், ஊரப்பாக்கம் ஆகிய பகுதிகளை கண்காணிக்க துணை கலெக்டர் நிலையில் 7 சிறப்பு அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டு நிவாரண பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. செங்கல்பட்டு மாவட்டத்தில் மொத்தம் 44 முகாம்களில் சுமார் 2,313 நபர்கள் பாதுகாப்புடன் தங்கவைக்கப்பட்டு, அவர்களுக்கு 3 வேளையும் உணவு வழங்கப்பட்டு வருவதுடன், அவர்களுக்கான அடிப்படை வசதிகளும் செய்து தரப்பட்டுள்ளன. இந்த ஆய்வின்போது, ஊரக தொழிற்துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ். ஆர். ராஜா, கு. செல்வப்பெருந்தகை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை முதன்மைச் செயலாளர் பி. அமுதா, டாஸ்மாக் மேலாண்மை இயக்குநரும், காஞ்சீபுரம் மாவட்ட கண்காணிப்பு அலுவலருமான எல். சுப்பிரமணியன், காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் டாக்டர் மா. ஆர்த்தி, செங்கல்பட்டு மாவட்ட கலெக்டர் ஆ. ர. ராகுல்நாத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## 3 வேளாண் சட்டங்களை ரத்து செய்யும் மசோதா

# பாராளுமன்றத்தில் நிறைவேற்றம்




வேளாண் துறை தொடர்பாக 3 வேளாண் சட்டங்களை மத்திய அரசு கடந்த ஆண்டு கொண்டு வந்தது. அந்த சட்டங்கள், இடைத்தரகர்கள் பிடியில் இருந்து விவசாயிகளை விடுவிக்கும் என்று மத்திய அரசு கூறியது. எனினும், வேளாண் சட்டங்களில் பாதகமான அம்சங்கள் இருப்பதாகக் கூறி பஞ்சாப், அரியானா, உத்தரபிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களை சேர்ந்த விவசாய சங்கங்கள் அந்த சட்டங்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தன. தொடர்ந்து விவசாயிகள், டெல்லி எல்லை பகுதிகளில் முற்றுகையிட்டு கடந்த ஆண்டு நவம்பர் 26ந் தேதி போராட்டத்தை தொடங்கினர். ஓராண்டுக்கு மேலாக அவர்கள் போராடி வருகிறார்கள். இதற்கிடையே, கடந்த 19ந் தேதி டெலிவிஷனில் உரையாற்றிய பிரதமர் மோடி, வேளாண் சட்டங்களை வாபஸ் பெறுவதாக அறிவித்தார். இதற்கான மசோதா, நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்படும் என்றும் அவர் கூறினார். இருப்பினும், நாடாளுமன்றத்தில் வேளாண் சட்டங்களை ரத்து செய்யும் வரை போராட்டத்தை தொடர விவசாயிகள் முடிவு செய்துள்ளனர். வேளாண் சட்டங்களை ரத்து செய்யும் மசோதாவுக்கு மத்திய மந்திரிசபை கடந்த சில தினங்களுக்கு முன்பு ஒப்புதல் அளித்தது. நாடாளுமன்ற குளிர் கால கூட்டத்தொடர் இன்று கூடியது. கூட்டத்தொடரின் முதல் நாளான இன்று வேளாண் சட்ட ரத்து மசோதா தாக்கல் செய்யப்படும் என ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. அதன்படி, இன்று பாராளுமன்றத்தில் இன்று வேளாண் சட்ட மசோதா தாக்கல் செய்யப்பட்டது. முதலில் மக்களவையில் இந்த மசோதா நிறைவேற்றப்பட்டது . பின்னர் குரல் வாக்கெடுப்பு மூலம் மாநிலங்களவையிலும் வேளாண் சட்ட ரத்து மசோதா நிறைவேறியது. எதிர்க்கட்சிகளின் கடும் அமளிக்கு இடையே இந்த மசோதா நிறைவேறியது. பாராளுமன்றத்தில் இன்று நிறைவேற்றப்பட்ட வேளாண் சட்ட ரத்து மசோதா, இனி ஜனாதிபதி ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படும்.








# அகர முதல

Aagaramuthalaa | மின்னிதழ் | www.Aagaramuthalaa.com



விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969




# கடலூர் மாவட்ட செய்திகள்

## கடலூரில் தொடரும் துயரம்:மழை ஓய்ந்தும் வடியாத வெள்ளம்

### 194 நீர்நிலைகள் நிரம்பின:பெருமாள் ஏரி முழு கொள்ளளவை எட்டியது





வடகிழக்கு பருவ மழை தீவிரமாக பெய்து வருவதை அடுத்து கடலூர் மாவட்டத்தில் உள்ள முக்கிய ஏரிகள், குளங்கள் அனைத்தும் நிரம்பி வருகின்றன. அந்த வகையில் மாவட்டத்தில் முக்கிய ஏரிகளில் ஒன்றாக இருப்பது குறிஞ்சிப்பாடி அருகே உள்ள பெருமாள் ஏரி. தொடர் மழையால் நெய்வேலி என்.எல்.சி. சுரங்கத்திலிருந்து வெளியேற்றப்படும் அதிகப்படியான நீர் மற்றும் மழைநீர் பரவனாறு மற்றும் செங்கால் ஓடை வழியாக ஏரிக்கு அதிகப்படியான தண்ணீர் வரத்து இருந்தது. அதாவது நேற்றைய நிலவரப்படி வினாடிக்கு 4 ஆயிரத்து 900 கனஅடி என்கிற அளவில் தண்ணீர் வரத்து இருந்தது. இதனால் ஏரி முழு கொள்ளளவான 6.4 அடியை எட்டியது. இதையடுத்து ஏரியில் இருந்து வினாடிக்கு 5200 கன அடி நீர் உபரி நீராக வெளியேற்றப்பட்டு வருகிறது. இந்த தண்ணீர் ஆலப்பாக்கம் வழியாக கடலில் சென்று கலந்து வருகிறது. இதற்கிடையே பெருமாள் ஏரியை சுற்றி உள்ள நிலங்களில் தண்ணீர் புகுந்துள்ளது. இதனால் நெல் உள்ளிட்ட பயிர்கள் அனைத்தும் மூழ்கி கிடப்பதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். கடலூர் மாவட்டத்தை பொறுத்தவரை பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் கொள்ளிடம் வடிநில கோட்டம் சிதம்பரம் கட்டுப்பாட்டில் 18 ஏரிகளும், விருத்தாசலம் வெள்ளாறு வடி நில கோட்டத்தில் 210 ஏரிகளும் உள்ளன. இந்த ஏரிகளில் கொள்ளிடம் வடி நில கோட்டத்தில் 4 ஏரிகள் அதன் முழு கொள்ளளவை எட்டி உள்ளன. விருத்தாசலம் வெள்ளாறு வடிநில கோட்டத்தில் 191 ஏரிகள் அதன் முழு கொள்ளளவை எட்டி உள்ளது. இதனால் இந்த ஏரிகளில் இருந்து உபரி நீர் வாய்க்கால் மூலம் வெளியேற்றப்பட்டு வருகிறது. இது தவிர 17 ஏரிகள் 76 முதல் 99 சதவீதமும், 8 ஏரிகள் 51 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையிலும், 7 ஏரிகள் 26 சதவீதம் முதல் 50 சதவீதமும், 2 ஏரிகள் 25 சதவீதமும் நிரம்பி உள்ளன. தொடர்ந்து மழை பெய்து வரும் நிலையில் இந்த ஏரிகளும் மேலும் நீர் மட்டம் உயர வாய்ப்பு உள்ளது.





கடலூர் மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கியதில் இருந்து பரவலாக மழை பெய்து வருகிறது. இதில் கடந்த 3 நாட்களாக மாவட்டம் முழுவதும் அடைமழை பெய்தது. இதனால் தாழ்வான பகுதிகளில் உள்ள குடியிருப்புகளை மழைவெள்ளம் சூழ்ந்ததால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. இந்த நிலையில் குமரிகடல் மற்றும் அதனை ஒட்டிய இலங்கை கடல் பகுதியில் நிலவும் வளி மண்டல சுழற்சி காரணமாக கடலூர், புதுச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் கனமழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்திருந்தது. அதன்படி கடலூரில் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை இடைவிடாமல் 4 வது நாளாக அடைமழை கொட்டித்தீர்த்தது. அதன்பிறகு மதியம் 1 மணி வரை மழை தூறிக்கொண்டே இருந்தது. பின்னர் மழை ஓய்ந்து லேசாக வெயில் தலைகாட்ட தொடங்கியது. கடலூரில் நேற்று முன்தினம் காலை 8.30 மணி முதல் நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் மட்டும் கடலூரில் 17.3 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. இதனால் கடலூரில் திரும்பிய பக்கமெல்லாம் சாலைகளில் மழைநீர் ஆறாக பெருக்கெடுத்து ஓடியது.

இதில் கடலூர்—நெல்லிக்குப்பம் சாலை, பாரதி சாலை, ஜட்ஜ் பங்களா ரோடு, வண்ணாரபாளையம் சாலை உள்ளிட்ட பகுதிகளில் முழங்கால் அளவுக்கு மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. அவ்வழியாக சென்ற வாகன ஓட்டிகள் மழை நீரில் தத்தளித்தபடி சென்றனர். இதேபோல் இடைவிடாது கொட்டிய மழையால் நகரில் மஞ்சக்குப்பம் பத்மாவதி நகர், மணலி எஸ்டேட், ராகவேந்திரா நகர், மரியசூசைநகர், சூரியா நகர், வெளிசெம்மண்டலம், வேல்நகர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள 14 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வீடுகளை மழைவெள்ளம் சூழ்ந்தது. ஆயிரத்திற்கும் அதிகமான வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது. இதனால் கடலூர் நகரமே வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது. குடியிருப்பு பகுதிகளில் நிறுத்தி வைத்திருந்த கார், லாரி, இருசக்கர வாகனங்கள் உள்ளிட்டவை வெள்ளத்தில் மிதக்கின்றன. மேலும் நேற்று பகலில் கனமழை பெய்யாததால், வீடுகளுக்குள் புகுந்த மழைநீரை வெளியேற்றும் பணியில் பொதுமக்கள் ஈடுபட்டனர். இதேபோல் கடலூர் முதுநகர் பகுதியிலும் குடியிருப்புகளை மழைநீர் சூழ்ந்தது. மேலும் பல வீடுகளுக்குள் தண்ணீர் புகுந்தது. இந்த தண்ணீரை வெளியேற்றும் பணியில் நகராட்சி ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர். சாலைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. இதுபற்றி அறிந்த கடலூர் தீயணைப்பு நிலைய அலுவலர் விஜயகுமார் தலைமையிலான வீரர்கள், வீடுகளில் சிக்கிய 20 க்கும் மேற்பட்டவர்களை படகு மூலம் மீட்டு, அருகில் உள்ள முகாம்களில் தங்க வைத்தனர். இதுவரை கடலூர் மாவட்டத்தில் 22 முகாம்களில் 3 ஆயிரம் பேர் தஞ்சமடைந்துள்ளனர். அங்கு அவர்களுக்கு உணவு வழங்கப்பட்டு வருகிறது . மேலும் கனமழையால் கடலூர், பண்ருட்டி , காட்டுமன்னார்கோவில் பகுதியில் உள்ள 7 கூரை வீடுகள் இடிந்து விழுந்துள்ளன. அந்த வீடுகளில் வசித்தவர்கள் ஏற்கனவே முகாம்களில் தங்க வைக்கப்பட்டதால், பெரும் அசம்பாவிதம் தவிர்க்கப்பட்டது. பின்னர் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்ட கடலூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அன்சுல் மிஸ்ரா வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மேலும் கடலூர் மாவட்டத்தில் இதுபோன்ற பிரச்சனைகளுக்கு நிரந்தர தீர்வு காண நடவடிக்கைகள் குறித்து உயர் அதிகாரிகளிடம் தகவல் தெரிவிக்கபட்டு உள்ளது கூடிய விரைவில் தீர்வு காணப்படும் என தெரிவித்தார்.

## கடலூர் அரசு ஆஸ்பத்திரி வருபவர்களுக்கு கொரோனா தடுப்பூசி கட்டாயம்.



தென் ஆப்பிரிக்காவில் கண்டறியப்பட்ட புதிய வகை கொரேனா வைரசான !ஓமிக்ரான்' தற்போது உலக நாடுகளை அச்சுறுத்தி வருகிறது. இந்த வைரசுக்கு பயந்து பல நாடுகள் தங்களது எல்லைகளை மூடி உள்ளன. விமான சேவைகளையும் ரத்து செய்து வருகிறது. இந்நிலையில் வெளிநாடுகளில் இருந்து தமிழகம் வரும் பயணிகளை கண்காணிக்க தனி குழு அமைக்கப்பட்டுள்ளது. தமிழகம் வரும் வெளிநாட்டு பயணிகளுக்கு மீண்டும் கொரோனா பரிசோதனை செய்து அவர்களை தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.இதன்படி கடலூர் மாவட்டத்திற்கும் வெளிநாடுகளில் இருந்து வருவோரை கண்காணிக்க சுகாதாரத்துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர். குறிப்பாக தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் இருந்து வருவோரை கண்காணிக்க அதிகாரிகள் தயாராகி வருகின்றனர்.இது பற்றி சுகாதாரப்பணிகள் துணை இயக்குனர் டாக்டர் மீராவிடம் கேட்ட போது, ஓமிக்ரான் வைரஸ் எச்சரிக்கையாக வெளிநாடுகளில் இருந்து வருவோரை கண்காணிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். இருப்பினும் சதவீதம் அனைவரும் கொரோனா தடுப்பூசி போட வேண்டும், முக கவசம் அணிய வேண்டும். அது தான் இதை தடுக்க நிரந்தர தீர்வாக இருக்கும் என்றார்.இதற்கிடையில் இந்த வைரஸ் எச்சரிக்கையாக கடலூர் அரசு ஆஸ்பத்திரிக்கு வருவோர் கட்டாயம் தடுப்பூசி போடவேண்டும் என்று கண்காணிப்பாளர் டாக்டர் சாய்லீலா கூறினார். இது பற்றி அவர் மேலும் கூறுகையில், ஓமிக்ரான் வைரஸ் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கடலூர் அரசு ஆஸ்பத்திரிக்கு வரும் அனைவரும் கட்டாயம் கொரோனா தடுப்பூசி போட்டு இருக்க வேண்டும். குறிப்பாக நோயாளிகளை கவனிப்பதற்காக உடன் இருப்பவர்கள் கட்டாயம் தடுப்பூசி போட்டு இருக்க வேண்டும்.தடுப்பூசி போடாமல் வருவோருக்கு கடலூர் அரசு ஆஸ்பத்திரிக்கு வர தடை விதிக்கப்படுகிறது. அதேபோல் ஆஸ்பத்திரிக்குள் வரும் அனைவரும் முக கவசம் அவசியம் அணிய வேண்டும். இல்லையென்றால் அனுமதி கிடையாது. சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும் என்றார்.




RNI No: 2019098444

Aagaramuthalaa | அகர முதல | www.Aagaramuthalaa.com | 01/12/2021

## வீடுகளுக்குள் புகுந்த மழைநீரை அகற்றக்கோரி
# நெல்லிக்குப்பம்,நெய்வேலியில் பொதுமக்கள் சாலை மறியல்



நெல்லிக்குப்பம் குடிதாங்கி சாவடி அருகே வண்ணாரப்பேட்டை பகுதியில் 50க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். தொடர் மழையில் குடியிருப்புகளை மழை நீர் சூழ்ந்து வீடுகளுக்குள்ளும் மழைநீர் புகுந்தது. இதனால் அப்பகுதி மக்கள் பெரும் அவதி அடைந்தனர். இந்த நிலையில் மழைநீரை அகற்றக்கோரி கடலூர் — நெல்லிக்குப்பம் சாலையில் அப்பகுதியை சேர்ந்த 50 க்கும் மேற்பட்ட பொதுமக்கள் மறியலில் ஈடுபட்டனர். இது பற்றி தகவல் அறிந்ததும் நெல்லிக்குப்பம் சப்—இன்ஸ்பெக்டர் பிரேம்குமார், நகராட்சி துப்புரவு அலுவலர் சக்திவேல் மற்றும் அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு சென்று பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது மழைநீரை உடனே வடிய வைக்க நடவடிக்கை எடுப்பதாக அதிகாரிகள் உறுதியளித்தனர். அதனை ஏற்று பொதுமக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். இந்த சம்பவத்தால் அப்பகுதியில் சுமார் 30நிமிடம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. இதேபோல் நெய்வேலி அருகே இந்திரா நகர் ஊராட்சி மற்றும் வடக்குத்து ஊராட்சிக்குட்பட்ட மேற்கு காலனி பகுதிகளில் வீடுகளுக்குள் மழை நீர் புகுந்ததால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. இதில் ஆத்திரமடைந்த அப்பகுதி மக்கள் கொட்டும் மழையில் அங்குள்ள சென்னை—கும்பகோணம் சாலையில் மறியலில் ஈடுபட்டனர். அப்போது வரும்காலங்களில் மழைநீர் தேங்காமல் இருக்க வடிகால் வாய்க்காலை அகலப்படுத்த வேண்டும், தேங்கியிருக்கும் மழைநீரை உடனே வடிய வைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரி அவர்கள் கோஷங்களை எழுப்பினர். இது பற்றி தகவல் அறிந்த நெய்வேலி டவுன்ஷிப் போலீஸ் இன்ஸ்பெக்டர் சாகுல் ஹமீது மற்றும் வடக்குத்து ஊராட்சி மன்ற தலைவர் அஞ்சலைகுப்புசாமி, வார்டு உறுப்பினர்கள் சம்பவ இடத்திற்கு சென்று பொதுமக்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது மழைநீரை வடிய வைக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அதிகாரிகள் உறுதியளித்தனர். இதையடுத்து பொதுமக்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். தொடர்ந்து பொக்லைன் எந்திரம் மூலம் வடிகால் வாய்க்காலை அகலப்படுத்தி தண்ணீரை வடிய வைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

## சிதம்பரம் நடராஜர் கோவிலில் ஆருத்ரா தரிசன விழா
# 11 ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது



கடலூர் மாவட்டத்தில் உலக புகழ்பெற்ற சிதம்பரம் நடராஜர் கோவில் உள்ளது. இங்கு ஆண்டுதோறும் ஆனி மாதம் ஆனி திருமஞ்சன விழாவும், மார்கழி மாதம் ஆருத்ரா தரிசன விழாவும் வெகுவிமரிசையாக நடைபெறுவது வழக்கம். சிறப்பு வாய்ந்த இந்த விழாக்களில் மூலவரான நடராஜரும், சிவகாமசுந்தரி அம்பாளும் வெளியே வந்து பக்தர்களுக்கு காட்சி அளிப்பார்கள். வேறு எந்த கோவில்களிலும் இந்த சிறப்பை காண இயலாது. அந்த வகையில் இந்த ஆண்டிற்கான ஆருத்ரா தரிசன விழா வருகிற 11 —ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. அன்று கோவில் கொடி மரத்தில் கொடியேற்றப்பட்டு, சாமிக்கு சிறப்பு பூஜைகள் நடைபெறும். விழாவில் 15 ந்தேதி கோபுர தரிசனம் எனும் தெருவடைச்சான் உற்சவமும், 19 ந்தேதி தேரோட்டமும், முக்கிய நிகழ்ச்சியான ஆருத்ரா தரிசன விழா 20ந்தேதியும் நடக்கிறது. அன்றைய தினம் அதிகாலை ஆயிரங்கால் மண்டபத்தில் நடராஜருக்கு மகா அபிஷேகமும், திருவாபரண அலங்காரமும், மாலை 4 மணி அளவில் ஆருத்ரா தரிசன விழாவும் நடக்கிறது. வருகிற 21ந்தேதி பஞ்சமூர்த்திகள் முத்துப்பல்லக்கு வீதி உலாவுடன் விழா நிறைவு பெறுகிறது. ஆருத்ரா தரிசன விழாவையொட்டி சிதம்பரம் நடராஜர் கோவில் கீழ சன்னதியில் பந்தல் அமைக்கும் பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது. விழாவுக்கான ஏற்பாடுகளை கோவில் பொது தீட்சிதர்கள் செய்து வருகின்றனர்.

# கடலூர்:இருவேறு கொடூர வழக்குகளுக்கு அதிரடி தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள்!



கடலூர் மாவட்டம் பண்ருட்டி அடுத்த எனதிரிமங்கலத்தை சேர்ந்த கலியபெருமாள் என்பவரின் மகன் தனசேகர்(29) கூலித் தொழிலாளியான இவர் கடந்த 20.11.2019 அன்று அப்பகுதியைச் சேர்ந்த 5 வயது சிறுமியைத் தனது வீட்டிற்கு அழைத்துச் சென்று பாலியல் வன்கொடுமை செய்தார். இதுகுறித்த புகாரின் பேரில் பண்ருட்டி அனைத்து மகளிர் காவல் நிலைய போலீசார் வழக்குப் பதிவு செய்து தனசேகரை கைது செய்து கடலூர் போக்ஸோ நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர். வழக்கு விசாரணைகள் நடைபெற்று வந்த நிலையில் நீதிபதி எழிலரசி நேற்று தீர்ப்பளித்தார். அதில் தனசேகருக்கு 20 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், 50 ஆயிரம் அபராதமும் விதிக்கப்பட்டது.

அபராதம் கட்டத் தவறினால் மேலும் 3 மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்படும் எனவும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் பாதிக்கப்பட்ட சிறுமிக்கு நலவாழ்வு நிதி மூலமாக கடலூர் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் ரூபாய் 5 லட்சம் இழப்பீடு ஒரு மாதத்திற்குள் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் நீதிபதி உத்தரவிட்டார். இதேபோல் நெல்லிக்குப்பம் அடுத்த மேல்குமாரமங்கலத்தைச் சேர்ந்தவர் பிரசன்ன சரவணன்(29) இவர் கடந்த 2011 ஆம் ஆண்டு சட்டக் கல்லூரியில் படித்தபோது பி. எட் படித்த 22 வயது பெண்ணுடன் பழக்கம் ஏற்பட்டு , இருவரும் காதலித்து வந்தனர் . திருமணம் செய்வதாக ஆசைவார்த்தை கூறி பிரசன்ன சரவணன் காதலியுடன் நெருங்கிப் பழகினார். இதனால் அந்த பெண் கர்ப்பம் அடைந்தார். எனினும் பிரசன்ன சரவணன் திருமணத்திற்கு மறுத்தார். அதையடுத்து பிரசன்ன சரவணனின் தந்தை பக்கிரி, தாய் அமுதா ஆகியோரிடம் பாதிக்கப்பட்ட பெண்ணின் குடும்பத்தினர் நியாயம் கேட்டனர். ஆனால் பிரசன்ன சரவணன் பெற்றோர், திருமணத்திற்கு வரதட்சணையாக 30 சவரன் நகை மற்றும் கார் கேட்டனர். இந்நிலையில் கடந்த 2017 ல் அந்த பெண்ணுக்குப் பெண் குழந்தை பிறந்தது. ஆனாலும் அவரை திருமணம் செய்ய பிரசன்ன சரவணன் மறுத்ததுடன் 'குழந்தை தனக்குப் பிறக்கவில்லை' எனக் கூறியுள்ளார். அதனைத் தொடர்ந்து பாதிக்கப்பட்ட பெண்ணின் பெற்றோர் பண்ருட்டி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் செய்தனர். புகாரின் அடிப்படையில் பிரசன்ன சரவணன், பக்கிரி, அமுதா ஆகியோரை கைது செய்து போலீசார் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர். வழக்கு விசாரணை நடைபெற்று வந்த நிலையில் பிறந்த குழந்தையின் தந்தை பிரசன்னா சரவணன் தான் என்பது மரபணு சோதனையில் தெரியவந்தது. இதையடுத்து நேற்று தீர்ப்பளித்த நீதிபதி பாலகிருஷ்ணன், சரவணனுக்கு 10 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் ஒரு லட்சத்தி 50 ஆயிரம் அபராதமும் விதித்துத் தீர்ப்பு கூறினார். இதில் ஒரு லட்சத்து 40 ஆயிரம் பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு இழப்பீடாக வழங்க வேண்டும் என்றும், பக்கிரி, அமுதா ஆகியோருக்கு தலா ஓராண்டு சிறைத் தண்டனையும் 10ஆயிரம் அபராதமும் விதித்து நீதிபதி தீர்ப்பளித்தார்.

## தென்பெண்ணையாற்றில் வெள்ளப்பெருக்கு:அந்தரத்தில் நின்ற
# கலெக்டர் அலுவலக பயணிகள் நிழற்குடை அகற்றம்



தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை தீவிரம் அடைந்துள்ளது. கடலூர் மாவட்டத்திலும் பரவலாக மழை பெய்து வருகிறது. சாத்தனூர் அணையில் இருந்து திறந்து விடப்பட்ட தண்ணீரும், கள்ளக்குறிச்சி, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் பெய்த கன மழையாலும் தென்பெண்ணையாற்றில் கடந்த 10 நாட்களுக்கு முன்பு வினாடிக்கு 1 லட்சத்து 20ஆயிரம் கன அடி வரை சென்றது. இதனால் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு, கரைகளில் பல இடங்களில் உடைப்பு ஏற்பட்டு ஊருக்குள் தண்ணீர் புகுந்ததால் பொதுமக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டனர். அந்த தண்ணீர் வடிந்து வந்த நிலையில் தற்போது கன மழை பெய்து வருவதால் தென்பெண்ணையாற்றில் மீண்டும் வெள்ளம் கரை புரண்டு ஓடுகிறது. வினாடிக்கு 1 லட்சத்து 80 ஆயிரம் கன அடி நீர் வெளியேற்றக்கூடிய தென்பெண்ணையாற்றில் நேற்று வினாடிக்கு 16 ஆயிரம் கன அடி தண்ணீர் சென்றது. தொடர் வெள்ளப்பெருக்கால் கடலூர் கலெக்டர் அலுவலகம் எதிரே தென்பெண்ணையாற்றங்கரையில் பயணிகள் நிழற்குடை கட்டப்பட்டு இருந்த பகுதியில் மண் அரிப்பு ஏற்பட்டது. இதில் 3 தூண்கள், தனது பிடிமானத்தை இழந்து அந்தரத்தில் நின்றது. ஒரே ஒரு தூண் பிடிமானத்துடன், பயணிகள் நிழற்குடை சாய்ந்த நிலையில் இருந்தது. இதை பார்த்த கடலூர் வருவாய்த்துறையினர், பொதுப்பணித்துறையினர் முன்னெச்சரிக்கையாக அந்த பயணிகள் நிழற்குடையை அகற்ற முடிவு செய்தனர். அதன்படி பொக்லைன் எந்திரம் வரவழைக்கப்பட்டு பயணிகள் நிழற்குடை இடித்து அகற்றப்பட்டது. தொடர்ந்து கலெக்டர் அலுவலக சாலையை தண்ணீர் அரித்து வருவதால், அந்த சாலையில் வாகன போக்குவரத்துக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அந்த வழியாக வந்த அனைத்து வாகனங்களும் திருப்பி விடப்பட்டன. ஒரு வழிச்சாலையான மஞ்சக்குப்பம் நேதாஜி சாலை, நேற்று 2 வழிச்சாலையாக மாற்றப்பட்டது. ஒரு வழிச்சாலையில் அனைத்து வாகனங்களும் கடலூரில் இருந்து புதுச்சேரிக்கும், அங்கு இருந்து கடலூருக்கும் வந்ததால் மஞ்சக்குப்பம் நேதாஜி சாலையில் வாகன போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

அகர முதல
உரக்க சொல்வோம்
அகர முதல
Aagaramuthalaa
தொடர்புக்கு
9597887847
8870884969
aagaramuthala@gmail.com
டிஜிட்டல் பிரிண்டர்ஸ், பத்திரிக்கை, இலக்கிய பேரவை, கல்விக் குழு





# அகர முதல

Aagaramuthalaa | மின்னிதழ் | www.Aagaramuthalaa.com


விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969

புதன், டிசம்பர் 01,2021 | மயிலாடுதுறை | மலர்:12 இதழ்:19

# மயிலாடுதுறை மாவட்ட செய்திகள்

## குழந்தைகள் நல குழுவிற்கு தலைவர் — உறுப்பினர்கள் நியமிக்க மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு

## மயிலாடுதுறை மாவட்டத்தில் ஏரிகளாக மாறிய விவசாய விளை நிலங்கள்



மயிலாடுதுறை மாவட்ட குழந்தைகள் நல குழுவிற்கு தலைவர் (ம)உறுப்பினர்களை நியமிக்கப்பதற்க்கு தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது என மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா தகவல் தெரிவித்துள்ளார். 2015 ஆம் ஆண்டின் இளைஞர் நீதி ( குழந்தைகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு) சட்டம் மற்றும் விதிமுறைகளின்படி புதிதாக அமைக்கப்பட்டுள்ள மயிலாடுதுறை மாவட்ட குழந்தைகள் நல குழுவிற்கு தலைவர் (ம) உறுப்பினர்கள்களாக நியமிக்கப்படுவதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளை கொண்ட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. குழந்தைகள் நல குழுவிற்கு ஒரு பெண் உட்பட தலைவர் மற்றும் உறுப்பினர்கள் அரசால் மதிப்பூதிய அடிப்படையில் மூன்று வருட காலகட்டத்திற்கு நியமிக்கப்பட உள்ளனர். குழந்தைகள் தொடர்பான உடல் நலம், கல்வி அல்லது குழந்தைகளுக்கான நலப்பணிகளில் குறைந்தது 7 ஆண்டுகள் முனைப்புடன் ஈடுபாடு கொண்டவர் அல்லது குழந்தை உளவியல் அல்லது மனநல மருத்துவம் அல்லது சட்டம் அல்லது சமூக பணி அல்லது சமூகவியல் அல்லது மனிதவள மேம்பாடு ஆகியவற்றில் பட்டம் பெற்று தொழில் புரிபவராக இருத்தல் வேண்டும். மேலும் விண்ணப்பதாரர்கள் நியமணம் செய்யப்படும்போது 35 வயதுக்கு குறையாதவராகவும், 65 வயதைப் பூர்த்தி செய்யாதவராகவும் இருத்தல் வேண்டும். ஒரு குழுவில் அதிகபட்சமாக ஒரு நபர் இருமுறை மட்டுமே பதவி விகிக்க தகுதி உடையவர்களாவர், ஆனால் தொடர்ந்து இருமுறை பதவி வகிக்க இயலாது.இதற்கான விண்ணப்ப படிவத்தை மயிலாடுதுறை மாவட்ட இணையதளத்தில் **https..mayiladuthurai.nic.in** பதிவிறக்கம் செய்துக்கொள்ளலாம் அல்லது நாகப்பட்டினம் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகிலிருந்து நேரடியாக பெற்றுக்கொள்ளலாம். தகுதிவாய்ந்த நபர்கள் மேற்கண்ட பதவிக்கு அதற்கான அமைந்த படிவத்தில், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு, அறை எண்.209, இரண்டாம் தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம் 611003 என்ற முகவரியில் கிடைக்கப்பெறுமாறு விண்ணப்பிக்கலாம்.பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 18 டிசம்பர் 2021 ஆம் தேதிக்குள் மேற்குறிப்பிட்ட அலுவலகத்திற்கு வந்து சேரவேண்டும். தகுதி மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் நியமணம் அமையும். இது குறித்து அரசின் முடிவே இறுதியானது . மேலும் விபரங்களுக்கு, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், அறை எண். 209 இரண்டாம் தளம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகப்பட்டினம் என்ற முகவரியில் நேரிலோ அல்லது 04364 253018, 8015222327 ஆகிய எண்களை தொடர்பு கொள்ளலாம் என மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் இரா. லலிதா தெரிவித்துள்ளார்.

### கொள்ளிடம் பகுதியில் உடைப்பு ஏற்படக்கூடிய அளக்குடி ஊராட்சியில்

## நிரந்தர தடுப்பு ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை



மழை, வெள்ள காலங்களில் கொள்ளிடம் பகுதியில் உடைப்பு ஏற்படக்கூடிய அளக்குடி ஊராட்சியில் நிரந்தர தடுப்பு ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றார் தமிழக சுற்றுச்சூழல், மாசுக் கட்டுப்பாடு, காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டுத் துறை அமைச்சர் சிவ.வீ மெய்யநாதன். மயிலாடுதுறை ஆட்சியர் அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த அனைத்துத் துறை அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டத்துக்குப் பின் செய்தியாளர்களிடம் அவர் கூறியது, தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பாக முகாம்களுக்கு கொண்டு செல்வது, அவா களுக்கு தேவையான உணவு மற்றும் அடிப்படை வசதிகளை நிறைவேற்றித் தருவது குறித்தும், வடகிழக்கு பருவமழையால் ஏற்பட்டுள்ள விவசாய பாதிப்பு, உள்ளாட்சி சாலைகள், பாலங்கள், ஏரிகள் ஆகியவற்றை பாதுகாப்பது உள்ளிட்டவை குறித்து ஆலோசிக்கப்பட்டது.சீர்காழி பகுதியில் இயந்திரங்களை கொண்டு நீர் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. பல இடங்களில் குளங்களுக்கு நீர் செல்லும் நீர்வழிப்பாதைகள் தூர்வாராமல் உள்ளதால் பல்வேறு குளங்களில் நீர் நிரம்பாமல் உள்ளது.விரைவில் இவை சரிசெய்யப்பட்டு குளங்களில் நீர் நிரப்ப நடவகக்கை எடுக்கப்படும். குளங்களில் வரத்து வாரிகளில் தூர்வாருவது குறித்து ஆய்வு செய்து 2400 கி.மீ. தூரம் அளவுக்கு சீர் செய்ய முதலமைச்சரின் கவனத்துக்கு கொண்டுசென்று சிறப்பு கவனம் செலுத்தப்படும். கொள்ளிடம் ஆற்றில் 80 ஆயிரம் கனஅடி தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. வெள்ள காலங்களில் கொள்ளிடம் பகுதியில் உடைப்பு ஏற்படக்கூடிய அளக்குடி ஊராட்சியில் நிரந்தர தடுப்பு ஏற்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்க தமிழக முதல்வரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். உப்பனாற்றின் இரு கரைகளும் அரிப்பு ஏற்பட்டு சேதமடைந்துள்ளதை சரி செய்ய திட்ட அறிக்கை தயார் செய்யப்படுகிறது. மயிலாடுதுறை பகுதியில் பல ஆண்டுகளாக தூர்வாரப்படாமல் உள்ள எல்லை வாய்க்கால் விரைவில் தூர்வார நடவடிக்கை எடுக்கப்படும்.டெல்டா மாவட்டங்களில் மறுசாகுபடிக்காக அறிவிக்கப்பட்ட இடுபொருள் மானியத்துக்கு பதிலாக, பயிர் பாதிப்புக்கான நிவாரணத் தொகையை வங்கிக் கணக்கில் வரவு வைக்க விவசாயிகள் வேண்டுகோள் விடுப்பது குறித்து கேட்கிறீர்கள், இதுகுறித்து, முதலமைச்சரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்படும் என்றார். கூட்டத்தில், மாவட்ட ஆட்சியர் இரா.லலிதா, மாவட்ட காவல் கண்காணிப்பாளா கு.சுகுணாசிங், சட்டப்பேரவை உறுப்பினர்கள் எஸ்.ராஜகுமார், (மயிலாடுதுறை) நிவேதா எம்.முருகன் ,( பூம்புகார்) எம்.பன்னீர்செல்வம்ழி (சீர்காழி)மாவட்ட வருவாய் அலுவலா சோ.முருகதாஸ் உள்ளிட்டோர் பங்கேற்றனா்.

## மயிலாடுதுறை மாவட்டத்தில் ஏரிகளாக மாறிய விவசாய விளை நிலங்கள்



மயிலாடுதுறை அருகே உள்ள மேலாநல்லூர், ராதாநல்லூர், பொன்வாசநல்லூர் கீழமருதாநல்லூர், வில்லியநல்லூர், மாப்படுகை, பொன்னூர், பாண்டூர் ஆக்கூர், சேத்தூர் நல்லாடை விளாகம் உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களில் 30 ஆயிரம் ஏக்கருக்கு மேல் சம்பா தாளடி பயிர்கள் கனமழையால் தண்ணீர் வடிய வழியின்றி நீரில் மூழ்கியுள்ளது. வடிகால் வாய்க்கால்கள் பல்வேறு இடங்களில் முறையாக தூர்வாரப்படாததால் விளைநிலங்களில் தண்ணீர்; வடியாமல் தேங்கியுள்ளதால் விவசாயிகள் வேதனையடைந்துள்ளனர். பல்வேறு இடங்களில் வாய்கால்களும் விளைநிலங்களிலும் சரிமட்ட அளவில் உள்ளதை காணமுடிகிறது. தண்ணீர் இதனால் பல்வேறு இடங்களில் விளைநிலங்கள் ஏரிபோல் காட்சியளிக்கிறது. வடகிழக்கு பருவமழை துவங்கியதிலிருந்து 3 வது முறையாக விளைநிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளது. வடகிழக்கு பருவமழையால் இரண்டு முறை பாதிக்கப்பட்டு பயிர்கள் சேதமடைந்த நிலையில் விவசாயிகள் எஞ்சிய பயிர்களை அடிஉரம் இட்டு காப்பாற்றினாலும் தற்போது மீண்டும் கனமழையால் நடவு செய்யப்பட்ட பயிர்கள், 40 நாட்களுக்கு மேல் உள்ள சம்பா தாளடி பயிர்கள் வெள்ளநீரில் மூழ்கியுள்ளதால் பேரிழப்பு ஏற்பட்டுள்ளதாக கூறும் விவசாயிகள் தண்ணீர் வடிந்தாலும் மகசூல் இழப்பு ஏற்படும் என்றும் ஏக்கருக்கு ரூபாய் 20 ஆயிரம் நிவாரணம் வழங்கி விவசாயிகளை தமிழக அரசு பாதுகாக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளனர்.

விளம்பர தொடர்புக்கு
9597887847
8870884969

### மயிலாடுதுறை மாவட்டத்தில் எலிகளிடம் இருந்து நெற்பயிரை காக்க

# எலி ஒழிப்பு முகாம் நடத்த விவசாயிகள் கோரிக்கை



காவிரி கடைமடை பகுதியான மயிலாடுதுறை மாவட்டத்தில் நெல் சாகுபடி அதிக அளவில் செய்யப்பட்டு வருகிறது. மயிலாடுதுறை சுற்றுவட்டார கிராமங்களில் மழையில் தப்பி நன்கு வளர்ந்து தண்டு உருளும் பருவத்தில் உள்ள சம்பா பயிர்களில் எலி தாக்குதல் அதிகரித்திருப்பதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில் இந்த ஆண்டு சம்பா சாகுபடி செய்த செலவுக்காவது பயிர்கள் விளைந்து கைக்கு கிடைக்குமா என்ற சந்தேகம் எழுந்துள்ளது. நாற்றுவிட்டு நடவுசெய்ய தொடங்கியது முதல் தொடர்ந்து மழைபெய்து வருவதால் பயிர்களை தண்ணீர் சூழ்ந்து பாதிப்படைந்துள்ளது. இந்த ஆண்டு குறுவை சாகுபடியின்போது எலிகள் தாக்குதல் குறைவாக இருந்தது. ஆனால் சம்பா, தாளடியில் மயிலாடுதுறை வட்டார பகுதிகளில் எலிவெட்டு தாக்குதல் அதிகரித்துள்ளது. 40 முதல் 80 நாட்கள் ஆன பயிர்களை எலிகள் கடித்து கொஞ்சம்நஞ்சம் இருந்த பயிர்களையும் அழிப்பதால் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்து வருகிறோம். கிட்டிபோட்டு எலிகளை பிடிக்கும் பணியை பலர் செய்கின்றனர். நூறு கிட்டிகள் போட வேண்டுமென்றால் அதற்கு 500ரூபாய் சம்பளம் கொடுக்க வேண்டும். பெரும்பாலான இடங்களில் ஒரே நேரத்தில் எலிதாக்குதல் இருப்பதால் கிட்டிகள் போடுவதற்கு ஆட்கள் கிடைப்பதில்லை. இதனால் ஒருசில நாட்களிலேயே எலிகள் பயிர்களை நாசம் செய்துவிட்டு சென்றுவிடுகிறது. கடந்த ஆட்சிகாலத்தில் கோடைகாலத்தில் ஒருங்கிணைந்த எலி ஒழிப்பு முகாம்களை வேளாண்மைத்துறை மூலம் நடத்தியது. அதேபோன்று, நடப்பு ஆண்டு கோடை காலத்தில் வேளாண்துறை மூலம் எலி ஒழிப்பு முகாம்களை நடத்தினால்தான் அடுத்த குறுவை சாகுபடிக்காவது எலிகள் தாக்குதலில் இருந்து பயிரை காப்பாற்ற முடியும் என்றனர்.

## தேசிய அளவிலான போட்டிகளில் பங்கேற்க அரசின் உதவியை நாடும் சாதனை பெண்



பொதுவாக ஏழ்மை என்பது பலவிதத்தில் சாதிக்கத் துடிக்கும் பல இளைஞர்களுக்கு முட்டுக்கட்டையாக இருந்து வரும் ஒன்று. அதுவும் குறிப்பாக விளையாட்டுத்துறையில் ஏழ்மை என்பது மிகப்பெரிய தடைக் கல்லாகும். இந்த ஏழ்மையை உடைத்தெறிந்து ஒரு சிலரால் மட்டுமே சாதிக்க முடிகிறது. அதுபோன்று ஏழ்மையில் சாதிக்க துடிக்கும் ஓர் மாணவியை பற்றிதான் நாம் காண இருக்கிறோம். மயிலாடுதுறை மாவட்டம் சேந்தன்குடி பகுதியை சேர்ந்தவர் ஏழை விவசாய ரவிச்சந்திரனின் மகள் 19 தான சிந்துஜா. தற்போது மயிலாடுதுறை அருகே தனியார் கல்லூரி ஒன்றில் வணிகவியல் இறுதியாண்டு படித்து வருகிறார். ஏழை விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த இவர், பள்ளியில் படிக்கும்போது பள்ளி சார்பில் தற்காப்பு கலை பயிற்சி மாணவிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது, அப்போது அங்கு வந்த குத்துச்சண்டை பயிற்சியாளர் மாணவி சிந்துஜாவுக்கு குத்துச் சண்டைப் பயிற்சியை ஒரு வாரகாலம் அளித்துள்ளார். அன்று முதல் குத்துச்சண்டை மீது ஏற்பட்ட ஆசை மற்றும் ஆர்வத்தின் காரணமாக உலக மகளிர் குத்துச்சண்டை போட்டியில் தொடர்ச்சியாக 5 முறை தங்கப்பதக்கம் வென்ற மணிப்பூர் மாநிலத்தைச் சேர்ந்த மேரிகோம் போல தானும் உலகளவில் நடைபெறும் குத்துச்சண்டை போட்டிகளில் கலந்துகொண்டு தங்க பதக்கங்கள் வென்று தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்க்க வேண்டும் என நினைத்துள்ளார். ஆனால் பள்ளியில் பயிலும் போது ஒருவாரம் மட்டுமே பயிற்சி பெற்ற இவர் தொடர்ந்து முறையாக குத்துச்சண்டை பயிற்சி பெறுவதற்கான வாய்ப்பும் வசதியும் தன்னிடம் இல்லை என மனம் தளராமல், தன்னிடம் இருந்த தன்னம்பிக்கை மற்றும் தைரியத்தையே மூலதனமாக கொண்டு நவீன ஏகலைவன் ஆக உருவெடுத்து, தனக்குத்தானே பயிற்சி அளித்துக் கொண்டார். இவரின் தொடர் முயற்சி மற்றும் பயிற்சியின் விளைவாக மண்டல அளவில் மாவட்ட அளவில் மற்றும் மாநில அளவில் நடந்த பல்வேறு போட்டிகளில் பங்கு கொண்டு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களை குவித்து வருகிறார். இந்நிலையில் தன் திறமை இத்துடன் மட்டும் நின்று விடாமல் தன்னைப் போன்று குத்துச்சண்டையின் மீது ஆர்வம் உள்ள மயிலாடுதுறை சுற்றுவட்டார பகுதிகளை சேர்ந்த ஏழை எளிய குடும்பத்தைச் சார்ந்த மாணவர்களுக்கும் தனக்குத் தெரிந்த குத்துச்சண்டையின் நுணுக்கங்கள் மற்றும் பயிற்சிகளை அளித்து அவர்களையும் பல்வேறு சாதனைகள் செய்ய வழி வகுத்து வருகிறார். மேலும் உலக அளவில் நடைபெறும் போட்டிகளில் கலந்து இந்தியாவுக்கு தங்கப் பதக்கங்களை பெற்று தர வேண்டும் என என்றும் அரசு உதவி செய்தாள் தமிழ்நாடு மட்டுமின்றி உலக அளவில் இந்தியாவிற்கு பெருமை சேர்த்து என்றும் தெரிவித்துள்ளார். மேலும் இதுபோன்ற ஏழ்மையால் திறனை வைத்து சாதிக்க முடியாத இளைஞர்களுக்கு அரசு கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பு.

### மயிலாடுதுறையில் இல்லம்தேடி கல்வி திட்ட

# விழிப்புணர்வு கலை நிகழ்ச்சி



கொரோனா காலத்தில் ஏற்பட்ட மாணவர்களுக்கு உண்டான கற்றல் இடைவெளியை போக்க தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்ட இல்லம் தேடி கல்வி திட்டத்தின் கிராமப்புற கலைநிகழ்ச்சி மயிலாடுதுறையில் நடைபெற்றது. கல்வித்துறை சார்பில் மயிலாடுதுறை கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற இல்லம்தேடி கல்வி திட்ட விழிப்புணர்வு கலைநிகழ்ச்சியை கோட்டாட்சியர் பாலாஜி துவங்கி வைத்தார். மாணவர்கள் இடைநிற்றலை தவிர்க்கும் வகையிலும், மாணவர்கள் பள்ளிக்கு செல்வதை ஊக்குவிக்கும் வகையிலும் நாட்டுப்புறக்கலைஞர்கள் இல்லம்தேடி கல்வி திட்டம் குறித்து வீதி நாடகம், ஒயிலாட்டம், நாட்டுப்புறப்பாடல் வழியாக கற்றல் இடைவெளி குறித்தும், கல்வியின் அவசியத்தை எடுத்துகூறி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதில் கல்வித்துறை அதிகாரிகள் ஆசிரிய பயிற்றுநர்கள், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். தொடர்ந்து புதிய பேருந்துநிலையம், பெரிய கடை வீதி சின்ன கடை வீதி உள்ளிட்ட நகரில் மக்கள் கூடும் இடங்களில் நாட்டுப்புற கலைஞர்கள் இல்லம்தேடி கல்வி குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதனை ஏராளமான பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்த்து ரசித்தனர்.

## மயிலாடுதுறை:நவீன குடும்ப நல சிகிச்சை குறித்த விழிப்புணர்வு வாகன பிரச்சாரம் தொடக்கம்



மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் ஆண்களுக்கான நவீன தழும்பில்லாத குடும்ப நல சிகிச்சை குறித்த விழிப்புணர்வு வாகன தொடக்க நிகழ்ச்சி நடைபெற்றது. மருத்துவமனை தலைமை மருத்துவர் ராஜசேகர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், மருத்துவத்துறை இணை இயக்குனர் ஆர். மகேந்திரன் விழிப்புணர்வு வாகனத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். பின்னர் அவர் பேசும்போது ஆண்களுக்கான நவீன தழும்பு இல்லாத குடும்ப நல சிகிச்சை இருவார விழா கடந்த 21 ஆம் தேதி தொடங்கி டிசம்பர் 4 ம் தேதி வரை நடைபெறுகிறது. இதையொட்டி மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் ஆண்களுக்கான நவீன தழும்பு இல்லாத குடும்ப நல சிகிச்சை அளிக்கப்படுகிறது. எனவே, தகுதியுடைய ஆண்கள் இந்த சிறப்பு முகாம்களில் கலந்துகொண்டு பயன்பெறலாம் என்றார். இதில் சிகிச்சை பெறுபவர்களுக்கு ரூ.4 ஆயிரம், படுக்கை விரிப்புகள், கொசு வலை, அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய பொருள்கள் வழங்கப்படுகின்றன. நிகழ்ச்சியில் மாவட்ட மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை நிர்வாக அலுவலர் தினேஷ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சீர்காழி அருகே உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்:1000பேருக்கு நலத்திட்ட உதவிகள்



மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியை அடுத்த அரசூர் கிராமத்தில் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. இதில் நாகை வடக்கு மாவட்ட பொறுப்பாளரும் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன் மற்றும் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் பன்னீர்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இந்நிகழ்வில் கொள்ளிடம் மேற்கு ஒன்றிய செயலாளர் ரவிக்குமார், சீர்காழி ஒன்றிய செயலாளர்கள் சசிகுமார் பிரபாகரன் சீர்காழி ஒன்றிய பெருந்தலைவர் கமலஜோதி, தேவேந்திரன் மாவட்ட குழு உறுப்பினர் விஜயபாரதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

